26th December 1956]

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இதைப்பற்றி முன்பே விளக்கியிருக்கிறேன். இந்த ஸொஸைட்டியின் பைலாவின்படி எந்த அங்கத்தினரை வேண்டுமானாலும் அவர்கள் சேர்ப்பதற்கு மறுக்கலாம். அதனால் அந்த ஸொஸைட்டியை நாம் நிர்ப்பந்திக்க முடியாது.

*Pest attack in Tanjore district*

* 14 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri P. Venkatesha Sholagar) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that there was a pest attack called ' kulai noi ' on the standing crops of paddy in Tanjore district recently;

(*b*) if so, the extent of the damage and the acreage affected; and

(*c*) what preventive measures were taken or are proposed to be taken by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Although there was no report of attack of ' kulai noi ' (Blast) in Tanjore district, there were reports about attack by ' Thrips ' and ' Jassids ' in the district and consequently the whole of the Tanjore district has been declared as pest affected and pesticides and fungicides are sold at half price to ryots for use against the pest attack.

**SRI S. RAMALINGAM :** ஸார், இன்று தஞ்சை ஜில்லாவில் நோய் பெருவாரியாக இருப்பதாலும் பெருவாரியான பூச்சிகள் விழுவதாலும் விவசாயிகள் பூராவும் பாதிக்கப்படுகிறார்கள். கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள், விவசாயிகளுக்கு அரை விலைக்கு மருந்து கொடுத்து வருகிறது என்று. ஆனால் அங்கு மருந்து தெளிப்பதற்கு போதிய கருவிகள் இல்லை. அதனால் பல விவசாயிகள் கருவிகளை இரவலாக வாங்கி உபயோகித்து வருகிறார்கள். இதனால் ஒரு பக்கம் தெளித்து வருவதற்குள் அடுத்தாற்போலுள்ள வயலில் பூச்சிப் போய்விடுகிறது. இப்படி பல கஷ்டங்கள் இருக்கிறது. ஆதலால் ஒரே சமயத்தில் சேர்ந்தால் போல் பூராவும் மருந்து தெளிப்பதற்கு ஏரோப்பிளேனை உபயோகிக்க சர்க்காருக்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா ? இப்படி உபயோகிப்பதால் இந்த விதமான கஷ்டங்களை போக்கமுடியும் என்று சர்க்கார் கருதுகிறார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஏரோப்ளேனை எல்லாம் உபயோகிக்க நமக்கு ஆற்றல் இருக்கின்றது என்று எனக்கு தோன்றவில்லை. மற்ற வெளி நாடுகளில் இதை உபயோகித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் ஸ்ப்ரே கருவிகள் விஷயத்தில் இன்னும் அதிகமாக கருவிகள் கொண்டு வருவதற்கு சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது. கூட்டுறவு சங்கங்ளிலும் இதை வாங்கி வைத்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறேன்.

**SRI S. SWAYAMPRAKASAM :** இந்த நோயை தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வளவுதூரம் மருந்து வாங்கியிருக்கிறார்கள் ? எவ்வளவு தூரம் அதை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் ?

[26th December 1956

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இதற்காக 30 ஆயிரம் ரூபாய் சர்க்கார் ஸாங்ஷன் செய்தது. இதை கன்ஸெஷன் வகையில் 30 ஆயிரம் ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri K. T. RAJU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது வெளிநாடுகளில்தான் நடந்து வருவதாக சொன்னார்கள். வடநாட்டில் ஐக்கிய மாகாணத்தில் இந்த மாதிரி விமானத்தில் மருந்து தெளித்திருக்கிற விபரம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அதை என் நமது மாகாணத்திலும் பரீட்சை செய்து பார்க்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லே.

Sri S. DAIVASIGAMONEY : It is not sufficient, Sir, if only insecticides are supplied to farmers; but proper sprayers also must be supplied. It is reported that sprayers are not available when they are required. May I know whether there are sufficient sprayers which can be distributed to the farmers in Tanjore district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have answered the position in Tamil already.

**Sri S. VADIVELU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் அதிகமாகவும் பெரிய மிராசுதார்களுக்கும் பெரிய நிலச்சுவான்தார்களுக்கும்தான் கிடைத்து வருகிறது. ஆதலால் இதர சாதாரண சாகுபடியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அதிகமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் வழி செய்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் மிராசுதார்கள் என்றும் சாகுபடியாளர்கள் என்றும் உள்ள வித்தியாசம் சர்க்காரைப் பொறுத்தமட்டில் இல்லே.

*Total cost on account of Non-gazetted Government Officers*

9–20 a.m. * 418 Q.—Sri P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of salary, dearness allowance and house-rent allowance paid to different categories of Non-gazetted Government Officers each separately?

The Hon. Sri C. SUBRAMANIAM : The cost on account of the pay and allowances of the Non-gazetted Government servants is as shown below :—

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| Pay ... ... ... ... ... ... | 970 |
| Dearness allowance ... ... ... ... | 350 |
| House-rent allowance ... ... ... ... | 56 |

The figures are approximate.

The compilation of separate figures for the different categories of Non-gazetted Government servants as required in the question will involve much labour and time. The figures for last grade employees alone are given in answer to a separate question by the same hon. Member. The figures now given relate to the State of